மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி

முன்னிலை: திருமதி. G.அபர்ணா., M.A., B.Sc., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நெய்வேலி

2020-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 3-ம் நாள் செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண்.1/2018

1) நாகலட்சுமி க/பெ.ஜெகதீசன்
2) விசாலாட்சி த/பெ.ஜெகதீசன்
3) மோகனசுந்தரம் த/பெ.ஜெகதீசன்
4) பவானி த/பெ.ஜெகதீசன்
5) முரளி த/பெ.ஜெகதீசன் ....வாதிகள்

//எதிர்//

1) தமிழ்நாடு அரசுக்காக, மாவட்ட ஆட்சியர் அவர்கள், கடலூர்.
2) வட்டாட்சியர் அவர்கள், குறிஞ்சிப்பாடி. ....பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 15.10.2020 அன்று இந்நீதிமன்றத்தில் என் முன்னார் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிதரப்பில் வழக்கறிஞர் திரு.M.மனோகரன்.,M.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும் இருத்தரப்பும் கேட்கப்பட்டும் முன்னிடப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்....

## தீர்ப்புரை

1) வாதிகள் அனைவரும் 04.12.1998-ம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசன் த/பெ. சுப்ரமணியன் என்பவரின் சட்டமுறை வாரிசுகளாக விளம்புகை செய்யகோரியும், அதன்படிக்கு வாரிசுசான்றிதழ் வழங்க 1-ம், 2-ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுத்து கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

**வழக்குரையின் சுருக்கம்:-**

2) 04.12.1998-ம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசனுக்கு 1-ம் வாதி மனைவி ஆவார். இவர்களுக்கு விசாலாட்சி (2-ம் வாதி), மோகனசுந்தரம் (3-ம் வாதி), பவானி (4-ம் வாதி), முரளி (5-ம்

வாதி) என்ற இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் மட்டுமே பிறந்துள்ளார்கள். இவர்கள் தவிர வேறு குழந்தைகள் ஏதும் இல்லை. இறந்துவிட்ட ஜெகதீசனுக்கு இறக்கும்போது 76 வயது ஆகும். ஜெகதீசனும் தந்தை சுப்ரமணியன் மற்றும் தாயார் குப்பம்மாள் ஆகியோர் பல ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டார்கள். வாதிகள் அனைவரும் இறந்துவிட்ட ஜெகதீசனின் சட்டமுறை வாரிசுகளாக உள்ளார்கள். இறந்துவிட்ட ஜெகதீகசனின் வாரிசு சான்றிதழ் இந்து அறநிலைதுறைக்கு சமர்பிக்க தேவைப்படுகிறது. அதன்படி இறந்துவிட்ட ஜெகதீசன் வாரிசு சான்றிதழ் கேட்டு 2-ம் பிரதிவாதி அலுவலகத்தை 3-ம் வாதி 04.02.2016-ம் தேதி அன்று அனுகியபோது நீதிமன்றத்தின் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்துவிட்டார்கள். ஆகையினால் இறந்துவிட்ட ஜெகதீசனின் வாரிசுகளாக வாதிகளை விளம்புகை செய்யவேண்டும். அதன்படிக்கு வாரிசு சான்றிதழ் வழங்க 2-ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கவேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>:-**

3) வாதிகளின் வழக்குரை சட்டப்படியும், சங்கதியின் படியும் நிலைக்க கூறியது அல்ல. வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இறந்துபோன ஜெகதீசனின் வாரிசுதாரர்கள் மேற்படி நபர்கள்தான் என்று எங்களால் இனம் காணமுடியவில்லை. மேற்படி வாதிகளின் விலாசம் சென்று விசாரணை செய்த வகையில் இறந்துபோன ஜெகதீசன் 18 வருடங்களுக்கு மேல் ஆகி உள்ள காரணத்தால், இறந்துபோனவரின் வாரிசுதாரர் இவர்கள்தான் என்று இனம் காணமுடியவில்லை. மேலும் வாதியின் வழக்குரையில் 2-ம் மற்றும் 4-ம் வாதி வேறு மாநிலத்தில் வசிப்பதாக கூறி அவர்களுடைய அடையாள அட்டை மட்டும் தாக்கல் செய்துள்ளதால் அவர்களுடைய கையொப்பம் உண்மைதானா என்று அவர் உயிரோடுதான் இருக்கிறாரா என்றும் எங்களால் விசாரணை செய்ய முடியவில்லை என்றும் வாரிசுதாரர்கள் எங்குள்ளார்கள் என்பதை கடுமையாக மெய்பிக்கவேண்டியது வாதியின் கடைமையே ஆகும். ஆகையினால் வாதிகளின் வழக்குரையை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>வழக்கெழு வினாக்கள்</u>:-**

4) வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை பரிசீலனை செய்யப்பட்டு இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டன.

1. வாதிகள் மட்டுமே இறந்துபோன ஜெகதீசனின் சட்டமுறை வாரிசுகளா?
2. வழக்குரையில் கோரியவாறு விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கப்பட்டதா?
3. இதர பரிகாரம் என்ன?

சான்றிதழ் வாதிதரப்பில் 3-ம் வாதி மோகனசுந்தரம் வா.சா.ஆ.1 ஆக விசாரணை செய்யப்பட்டிருக்கிறார். வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருகிறது.

பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகளாக யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பபடவில்லை.

**<u>வழக்கெழு வினா 1ம் மீதான தீர்முடிவு</u>:-**

5) வாதிகள் இறந்துபோன ஜெகதீசனின் சட்டமுறை வாரிசுகளா?

வாதிகள் அனைவரும் 04.12.1998-ம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசன் த/பெ. சுப்பரமணியன் என்பவரின் சட்டமுறை வாரிசுகளாக விளம்புகை செய்யகோரியும் அதன் படிக்கு வாரிசு சான்றிதழ் வழங்க 2-ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுத்து கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள்.

6) வழக்குரையின்படி தரப்பினர்கள் இந்தியன்-இந்து என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகையினால் இந்து வாரிசுரிமை சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்டுள்ளவாறு வாதிகளின் சட்டப்படியான வாரிசு நிலைமையை ஆராய்ந்து முடிவு செய்யவேண்டும். இந்து வாரிசுரிமை சட்டடத்தின்படி வாதிகள் அனைவரும் 04.12.1998 -ம் தேதியன்று இறந்துபோன ஜெகதீசன் த/பெ. சுப்பரமணியன் என்பவரின் சட்டமுறை வாரிசுகள் என்ற தகுதியை பெறுவார்களா? என்பதை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

7) இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்தபோதிலும், வாதிகளின் வழக்கிற்கு திட்டவட்டமான சாட்டுரைகளை மறுத்து எதிர் கட்சி செய்யவில்லை. இறந்துபோன ஜெகதீசன் இறந்து 18 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தினால் இறந்துபோனவரின் வாரிசுதாரர்கள் இவர்கள்தான் என்று இனம் காணமுடியவில்லை என்றும் வாதிகள் தரப்பு வழக்கு உரிய சான்றிதழ் மூலம் வாதிகளே மெய்ப்பிக்கவேண்டும் என்று பிரதிவாதிகள் தரப்பில் எதிர்கட்சி செய்யப்பட்டது.

8) 3-ம் வாதி மோகனசுந்தரம் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டிருக்கிறார். அவர் தனது சாட்சியத்தில் வாதி தரப்பு வழக்கை வலியுறுத்தி சாட்சியம் அளித்திருக்கிறார். வாதிகள் தரப்பில் வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ. 13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு இருக்கிறது. வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கும் இறப்பு சான்றிதழினை பரிசீலனை செய்ததில் ஜெகதீசன் 04.12.1998 ம் தேதியன்று இறந்துவிட்டார் என்ற சங்கதி தெரியவருகிறது. வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கும் குடும்ப அட்டையை பரிசீலணை செய்ததில் 1-ம் வாதி நாகலட்சுமி

3-ம் வாதியின் தாயார் என்று தெரியவருகிறது. வாதித்தரப்பில் சமர்பிக்கப்பட்டுள்ள என்.எல்.சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட மருத்துவ புத்தகத்தின் நகலை பரிசீலனை செய்ததில் 1-ம் வாதி நாகலட்சுமி இறந்த ஜெகதீசனின் மனைவி என்ற உண்மை புலன் ஆகிறது. வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கும் 2-ம் வாதியின் பான் கார்டு நகலை பரிசீலனை செய்ததில் 2-ம் வாதி விசாலாட்சி என்பவரின் தந்தை ஜெகதீசன் என்ற சங்கதி தெரியவருகிறது. மேலும் வா.சா.ஆ.4. SSLC சான்றிதழினை பரிசீலனை செய்ததில் 2-ம் வாதி விசாலாட்சி 11.06.1952-ம் தேதியன்று ஜெகதீசனுக்கு மகளாக பிறந்திருக்கிறார் என்ற சங்கதி தெரியவருகிறது. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கும் ஓட்டுனர் உரிமம் மற்றும் ஆதார் அட்டை நகலை பரிசீலனை செய்ததில் 3-ம் வாதி மோகனசுந்தரத்தின் தந்தை ஜெகதீசன் என்று தெரியவருகிறது. வா.ச.ஆ.7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கும் பான் கார்டு, ஆதார் அட்டை ஆகிய ஆவணங்களை பரிசீலணை செய்ததில் 3-ம் வாதி பவானியின் தகப்பனார் ஜெகதீசன் என்று தெரியவருகிறது. வா.சா.ஆ.9, 10 மற்றும் 11 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கும் T.C, ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் 5-ம் வாதி முரளி 10.04.1966 அன்று ஜெகதீசன் என்பவருக்கு மகனாக பிறந்திருக்கிறார் என்ற சங்கதி என்று தெரியவருகிறது. வா.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கும் 07.02.2016-ம் தேதியிட்ட குறிஞ்சிப்பாடி வட்டாட்சியரின் குறிப்பாணையை பரிசீலணை செய்யும்போது மனுதாரர் தந்தை ஜெகதீசன் இறந்து 18 வருடங்களுக்கு மேலாக இருந்ததால் இறந்தவரின் வாரிசுதாரர்களை இனங்காண இயலாத காரணத்தினால் மனுதாரரை நீதிமன்றத்தில் மூலம் வாரிசுச்சான்று பெற்றுக்கொள்ளுமாறு குறிஞ்சிப்பாடி வருவாய் வட்டாட்சியரால் அறிவுறுத்தப்பட்ட சங்கதியின், இவ்வழக்கிற்கான வழக்கு மூலம் ஏற்பட்ட சங்கதியும் தெரியவருகிறது. வாதி தரப்பு சான்றுகளின் உள்ளடக்கங்களை பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கவில்லை.

9) இவ்வழக்கில் 3-ம் வாதி மோகனசுந்தரம் வா.சா.1 ஆக 13.08.2018-ம் தேதியன்று விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது முதல் விசாரணையில் தனது தயார் நகலட்சுமிக்கும் தந்தை ஜெகதீசனுக்கும் 72 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது என்றும் அவர்கள் கணவன், மனைவியாக நெய்வேலியில் வாழ்ந்து வந்த பயனாக 2, 3, 4 மற்றும் 5 வாதிகள் வாரிசுகளாக பிறந்துள்ளார்கள் என்றும் தங்களை தவிர ஜெகதீசன் என்பவருக்கு வேறு குழந்தைகள் இல்லை என்றும் தனது தந்தை ஜெகதீசன் 04.12.1998 தேதியன்று இறந்துவிட்டதாகவும் 2 மற்றும் 4-ம் பிரதிவாதிகள் தனது சகோதரிகள் ஆவார்கள் என்றும் அவர்கள் திருமணம் முடிந்து வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்றும் தனது தந்தை ஜெகதீசனின் மற்றும் தாயார் பல ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டதாகவும் தனது வழக்கை வலியுறுத்தி சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் வாதிகளை குறுக்கு விசாரணை செய்ய முற்படவில்லை. வாதிகள் தரப்பு வழக்கை பாதிக்கும்

முரண்பட்ட சங்கதிகள் எதையும் பிரதிவாதிகள் தங்களது வழக்குரையிலோயோ சாட்சியின் வாயிலாகவோ கூறவில்லை.

10) வாதித்தப்பு வாக்குமூலங்கள் சாட்சியங்கள், சான்றுகள் ஆகியவற்றையிலிருந்து 04.12.1998 ஆம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசனுக்கு இந்து வாரிசுரிமை சட்டம் 1956 ன் கீழான பிரிவு 8 உ/இ முதல் வகுப்பு அட்டவணையின் கீழ் முதல் வகுப்பு வாரிசுகள் என்ற தகுதியை வாதிகள் பெறுவார்கள் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகையினால் இந்து வாரிசுரிமை சட்டம் 1956 பிரிவு 8 உ/இ வகுப்பு 1 அட்டவணை கீழ் வாதிகள் அனைவரும் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், நெய்வேலி நகரம், வட்டம் -2, வ.உ.சி தெரு, எண்.சி.26 என்ற முகவரியில் வசித்து வந்து 04.12.1998 ம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசன் த/பெ. சுப்பரமணியன் என்பவரின் முதல் வகுப்பு சட்ட முறை வாரிசுகள் என்ற தகுதியை பெறுவார்கள் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**வழக்கெழு வினா 2 மீதான தீர்முடிவு:-**

11) வழக்குரையில் கோரியவாறு விளம்புகை பரிகாரம் பிறப்பிக்கதக்கதா இந்து வாரிசுரிமை சட்டம் 1956 பிரிவு 8 உ/இ வகுப்பு 1 அட்டவணை கீழ் வாதிகள் அனைவரும் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், நெய்வேலி நகரம், வட்டம் -2, வ.உ.சி தெரு, எண்.சி.26 என்ற முகவரியில் வசித்து வந்து 04.12.1998 ம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசன் த/பெ. சுப்பரமணியன் என்பவரின் முதல் வகுப்பு சட்டமுறை வாரிசுகளாக உள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் வழக்கெழு வினா 1-ல் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினால் 1 முதல் 5 வாதிகளும் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், நெய்வேலி நகரம், வட்டம் -2, வ.உ.சி தெரு, எண்.சி.26 என்ற முகவரியில் வசித்து வந்து 04.12.1998 -ம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசன் த/பெ. சுப்பரமணியன் என்பவரின் முதல் வகுப்பு சட்ட முறை வாரிசுகளாக உள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் விளம்புகை செய்கிறது.

**வழக்கெழு வினா 3 ன் மீதான தீர்முடிவு:-**

12) இறந்துவிட்ட ஒருவரின் சட்டமுறை வாரிசுகள் யார் என்று சாட்சி மற்றும் சான்றுகளின் அடிப்படையில் உரிமையியல் நீதிமன்றம் முடிவு செய்யும். இந்நிலையில் வாதிகள் அனைவரும் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், நெய்வேலி நகரம், வட்டம்-2, வ.உ.சி தெரு, எண்.சி.26 என்ற முகவரியில் வசித்து வந்து 04.12.1998 -ம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசன் த/பெ. சுப்பரமணியன் என்பவரின் முதல் வகுப்பு சட்ட முறை வாரிசுகளாக உள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் விளம்புகை செய்யப்பட்டுள்ள நிலையில், 2-ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கவேண்டிய அவசியம் உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகையினால் 1 -ம் மற்றும் 2-ம் பிரதிவாதி 04.12.1998 ம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசன் த/பெ. சுப்ரமணியன் என்பவரின் முதல் வகுப்பு சட்ட முறை வாரிசுகளான 1 முதல் 5 வாதிக்கு வாரிசுசான்றிதழ் வாதிகளுக்கு வழங்க வேண்டும் என

செயலுத்து கட்டளை பரிகாரம் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படுகிறது. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது இதர பரிகாரம் ஏதும் வழங்குவதற்கில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அவரவர் செலவுத்தொகையினை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**இறுதிமுடிவு:-**

இறுதியாக, 1 முதல் 5 வாதிகளுக்கு இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956-ன் பிரிவு 15(1) (அ)-ன் கீழ் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், நெய்வேலி நகரம், வட்டம்-2, வ.உ.சி தெரு, எண்.சி.26 என்ற முகவரியில் வசித்து வந்து 04.12.1998-ம் தேதியன்று இறந்துவிட்ட ஜெகதீசன் த/பெ.சுப்பரமணியன் என்பவரின் முதல் வகுப்பு சட்ட முறை வாரிசுகளாக உள்ளார்கள் என்று விளம்புகை செய்யப்படுகிறது. 1ம் மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு வாரிசுசான்றிதழ் வாதிகளுக்கு வழங்க வேண்டும் என செயலுத்து கட்டளை பரிகாரம் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படுகிறது. அவரவர் செலவுத் தொகையினை அவரவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் நெய்வேலி.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>**

வா.சா. 1 : மோகனசுந்தரம்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

வா.சா.1 : என்.எல்.சி. மருத்துவ அடையாள புக் மற்றும் குடும்ப அட்டை நகல்.

வா.சா. 2 : 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல்.

வா.சா. 3 : 2-ம் வாதியின் பான் கார்டு நகல்.

வா.சா. 4 : வா.சா.1ன் இடைநிலை கல்வி சான்றிதழ் நகல்.

வா.சா. 5 : வா.சா.1ன் ஓட்டுனர் உரிமம் நகல்.

வா.சா. 6 : வா.சா.1ன் ஆதார் அட்டை நகல்.

வா.சா. 7 : 4-ம் வாதியின் ஆதார் அட்டை நகல்.

வா.சா. 8 : 4-ம் வாதியின் பான்கார்டு நகல்.

வா.சா. 9 : 5ம் வாதியின் பள்ளிச்சான்றிதழ் நகல்.

வா.சா. 10 : 5ம் வாதியின் ஆதார் அட்டை நகல்.

வா.சா. 11 : 5ம் வாதியின் ஓட்டுநர் உரிமம் நகல்.

வா.சா. 12 : 04.12.1998ல் வா.சா.1ன் தந்தை இறந்ததற்கான சான்றிதழ் நகல்.

வா.சா. 13 : 07.02.2016ல் 2ம் பிரதிவாதி கொடுத்த மேற்குறிப்பு நகல்.

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:</u>**

இல்லை.

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2020-ம் ஆண்டு நவம்பர் செவ்வாய்கிழமை 3-ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்பு பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் நெய்வேலி.